பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

மலர்: 20] சென்னை: ஆவணி 6 (22—8—72) செவ்வாய் வெளியூர்: ஆவணி 7 (23—8—72) புதன் [இதழ்: 58

ரொக்க இருப்புக்கு உச்ச வரம்பு

மத்திய அரசின் நிலை என்ன?

புதுடில்லி, ஆக. 22—

"ஒருவர், தம்முடைய கையில் வைத்துக் கொள்ளக்கூடிய ரொக்க இருப்புக்கு உச்ச வரம்பு விதிக்கும் யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை"

என்று மத்திய நிதியமைச்சர் ஒய். பி. சவாண், நிதித் துறையின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கூறினர்.

டில்லியின் இந்தித் திணிப்பு முயற்சி

தமிழக முதல்வரின் கடிதத்துக்குப் பதில் என்ன?

முதலமைச்சர் சொல்லாததைச் சொன்னதாகக்கொண்டு ஆராய்ச்சி நடத்துகிறார்களாம்

முரண்பட்ட தகவல்களை மறுத்து கலைஞர் நிருபர்களிடம் விளக்கம்

புதுடில்லி ஆக. 22—

மத்திய அரசுக்கும் - மாநிலங்களுக்கும் இடையே எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் இந்தியில்தான நடைபெற வேண்டுமென எந்த உத்தரவும் மத்திய அரசாங்கத்திலிருந்து அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை என்று உள்விவகாரத் துறை வட்டாரம் கூறுகிறதாம்.

இப்படிப்பட்ட உத்தரவுகள் எல்லாம் உள்விவகாரத் துறை வழியாகத்தான் செல்வது வழக்கம்; ஆகவே தமிழ்நாடு சட்டமன்றத்தில் இப்படி ஓர் உத்தரவு வந்திருப்பதாக முதலமைச்சர் கூறியிருப்பது, அதில் உள்ளவர்களுக்கு வியப்பாக இருக்கிறதாம்; என்ருலும், இதைப்பற்றித் தீர விசாரிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருக்கிருர்களாம்.

மத்திய அரசுக்கு இனி இந்தியில்தான் கடிதம் எழுத வேண்டும் என்ற கடிதம் வந்திருப்பதாகத் தமிழக முதலமைச்சர் சட்டப பேரவையில் கூறியதாகக் கற்பனை செய்து கொண்டு மத்திய அரசு இந்தத் தீவிர ஆராய்ச்சியில் இறங்கியுள்ளது.

உண்மையில் முதலமைச்சர் கூறியதெல்லாம், 'மத்திய அமைச்சர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதும்போது இனி இந்தியில்தான் குறிப்பிட வேண்டும் என்று மத்திய அரசு கடிதம் எழுதியிருந்தது' என்பதுதான்; 'இப்படிப்பட்ட உத்தரவு, ஏற்கனவே நேரு அளித்த உறுதிமொழிக்கும் - ஆட்சிமொழிச் சட்டத்துக்கும் முரணனது என்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன்' என்றும் முதலமைச்சர் கலைஞர், சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது சென்ற வாரத்தில் கூறினர்.

தியாகிகளுக்கு அளிக்கப்பட்ட தாமிரப பத்திரங்களில் உள்ள வாசகங்களை வட்டார மொழிகளில் பொறித்திருக்கலாம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கூறியதை உள்விவகார வட்டாரங்கள் குறிப்பிட்டு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நாட்டின் நன்றியைத் தெரிவிப்பதுதான் ஒரே நோக்கம் என்றும், ஆகவே, அதை 16 மொழிகளில் பொறித்துக் கொண்டிருக்க முடியாது என்றும், அதற்காகத்தான் ஒவ்வொரு பத்திரத்துடனும் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு அளிக்கப்பட்டது என்றும், பத்திரம் பெறுபவருக்கு இந்தி தெரியா விட்டால் வாசகத்தைப் புரிந்து கொள்ள அது உதவும் என்றும் அவ்வட்டாரம் கூறியிருக்கிறது.

முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 21—

"மத்திய அரசில் உள்ள அமைச்சர்களின் பதவிப்பெயர்களைக் குறிப்பிட்டு எழுதும் போது இந்தியில்தான் இனி எழுதவேண்டும் என்று மத்திய அரசின் அமைச்சரவை அலுவலகத்திலிருந்து தமிழக அரசுக்கு கடிதம் வந்திருப்பது உண்மையே"

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் கூறினர்.

முதலமைச்சர் அறிவிப்பு வியப்பை அளிப்பதாகவும், 'இந்தியில்தான் கடிதப் போக்குவரத்து நடைபெற வேண்டும் என்று கூறவில்லை' என்றும் மத்திய உள் விவகாரத்துறை வட்டாரம் தெரிவித்ததாக டில்லி செய்தி கூறி இருந்தது; இதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்து செய்தியாளர்கள் கேட்டனர்.

"1971-ம் ஆண்டு மே மாதம் 3-ந் தேதியிட்ட — குடியரசுத் தலைவரின் பெயரால் ஆன உத்தரவு, மத்திய அரசின் அமைச்சரவை அலுவலகத்திலிருந்து மாநில அரசுக்கு வந்திருப்பது உண்மையே" என்று முதல்வர் தெரிவித்தார்.

'மத்திய அமைச்சர்களைக்குறிப்பிட்டு எழுதும்போது, இனி இந்தியில்தான் அவர்களுடைய பதவிப் பெயர்களை குறிப்பிட வேண்டும் என்று அந்த உத்தரவு கூறுகிறது" என்று முதல்வர் சொன்னர்.

'இந்தியில்தான் கடிதப் போக்குவரத்து நடைபெறவேண்டும் என்று தாம் சொல்லவில்லை' என்பதையும் அவர் தெளிவுபடுத்தினர்.

இந்த உத்தரவுப்படி, தலைமை அமைச்சரை இனி 'பிரதான மந்திரி' என்றும், வேளாண்மை அமைச்சரை 'கிருஷிக் மந்திரி' என்றும்தான் இந்தியில் குறிப்பிட்டு எழுத வேண்டும் என்று ஆகிறது.

கோவையில் எதிர்க் கட்சிகட்கு மூக்குடைப்பு

நகராட்சித் தலைவர்மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

கோவை, ஆக. 21—

கோவை நகராட்சித் தலைவர் சக்கரைமீது எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்த மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியாக 24 உறுப்பினர்கள் வந்திருக்க வேண்டும்; ஆனல் 22 உறுப்பினர்களே வந்திருந்தனர்; அதனல், நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்கப்படாமலேயே தோல்வியடைந்தது.

பழைய காங்கிரசு - இந்திரா காங்கிரசு - இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி - சுதந்தராக் கட்சி ஆகியவைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

நகராட்சியில் கட்சிவாரியான எண்ணிக்கை வருமாறு:—

தி. மு. கழகம்	13
சிண்டிகேட் காங்கிரசு	9
இந்திரா காங்கிரசு	7
இந்தியக் கம்யூனிஸ்டு	6
சுதந்தரா	1
முஸ்லிம் லீக்	1
மார்க்சிஸ்டு (கம்யூ)	2

கழக உறுப்பினர்களுடன் முஸ்லிம் லீக் - மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவில்லை.

மற்ற எதிர்க் கட்சிகளின் பலம் 23; அதிலும் இந்திரா காங்கிரசு உறுப்பினர் வரவில்லை; அதனல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது.

மக்கள் தொடர்பு அதிகாரிகள் புரிவது கட்சிப் பணியா?

காங்கிரசு மாநாட்டுக்கு அழைத்தாலும் அவர்கள் வரத் தயார்

சிண்டிகேட் உறுப்பினர் கேள்விக்கு முதல்வர் பதில்

சென்னை, ஆக. 22—

"தமிழ்நாட்டில் மக்கள் தொடர்பு அதிகாரிகள் எட்டு பேர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்"

என்று, இன்று சட்டப் பேரவையில் பி. எஸ். மணியம் கேள்விக்கு முதல்வர் கலைஞர் பதிலளித்தார்.

ஜேம்ஸ் (சிண்டி):—"இந்த மக்கள் தொடர்பு அதிகாரிகள் கட்சி வேலை செய்வதாகவும், தி.மு.க. மாநாட்டு வேலைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறதே—அது உண்மையா?"

முதலமைச்சர்:—"அவர்களுக்கென்று விதிமுறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இந்த அரசின் பணிகளையும் - சாதனைகளையும் எடுத்துவிளக்கும் பணியில் அவர்கள் ஈடுபடுகிருர்கள்; மாநாடுகள் - கோயில் திருவிழாக்கள் மற்றும் எங்கெங்கு கூட்டம் கூடுகிறதோ அங்கெல்லாம் அவர்கள் இந்த விளம்பரப் பணியினைச் செய்கிருர்கள்; தி. மு. க. மாநாட்டிற்கு மட்டுமல்ல - காங்கிரசு மாநாட்டிற்கும் வரவேண்டும் என்று அழைப்பார்களானல், அங்கும் விளம்பரப் பணியில் ஈடுபட அவர்கள் தயாராக இருக்கிருர்கள்."

பணக்காரர்களுடன் சேர்ந்து அரசை எதிர்ப்பவர்கள் பிற்போக்காளர்களே!

மணலி கந்தசாமி கூறுகிருர்

சென்னை, ஆக. 21—

மணலி சி. கந்தசாமி:—"'தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்ட'த்தை, மீண்டும் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பவேண்டும்; பணக்காரர்களைப் பார்த்து இந்த அரசு பயப்படத் தேவையில்லை; ஏழைகள் இந்த அரசின் பக்கம் இருக்கிருர்கள்."

முதலமைச்சர் கலைஞர்:—"பணக்காரர்களைக் கண்டு பயம் ஒன்றும் ஏற்படவில்லை; ஐயம்தான் அதற்குக் காரணம்; இதுபோன்ற தீவிரத் திட்டங்களால் பாதிக்கப்படும் பணக்காரர்கள் அரசை எதிர்க்கும்போது — அவர்களுடன் தீவிரவாதிகள் சேர்ந்துவிடுவார்களோ என்ற ஐயம்தான் எழுகிறது!"

மணலி கந்தசாமி:—"அப்படிப்பட்ட நிலை ஏற்படாது; பிற்போக்காளர்களோடு தீவிரவாதிகள் என்றும் சேரமாட்டார்கள்; அப்படிச் சேர்ந்தால் அவர்கள் தீவிரவாதிகள் அல்லர்; பிற்போக்காளர்களை ஆதரிப்பவர்கள், முற்போக்காளர்களாக இருக்கமுடியாது!"

—சட்டப் பேரவையில்

பூம்புகாரில் கலைஞர்

கலைக் கூடத்தைப் பார்வையிட்டார் - ஆய்வுரை வழங்கினர்

சீர்காழி, ஆக. 22—

சீர்காழியிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்தில் அமைக்கப்பட்டுவரும் பூம்புகார் கலைக் கூடத்தை முதலமைச்சர் கலைஞர் பார்வையிட்டார்.

ஆண்டுதோறும் 'இந்திர விழா' நடத்தவும், அதையொட்டி நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், அதற்கு ஏற்ற கலையரங்கம் ஒன்று அமைக்க வேண்டுமென்றும் கலைஞர் ஆலோசனை கூறினர்.

கலைக்கூடத்தின் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு, கோவலன் - கண்ணகி - மாதவி - இளங்கோவடிகள் ஆகியோரின் சிலைகள் அமைப்பது பற்றி ஆலோசனை வழங்கினர்.

இங்கு காவிரி, கடலோடு கலக்குமிடத்தையும் கலைஞர் பார்த்தார்.

மக்களின் கைக்கு வந்துவிட்டது கழகம்

இதனை அழிக்கப் பிறரால் இயலாது

எதிர்ப்புக்களையெல்லாம் தகர்த்து அண்ணா வழியில் தொடர்ந்து செல்வோம்

சிதம்பரம், ஆக. 21

"தி. மு. கழகம், ஏதோ சில தலைவர்களின் கையில் இருக்கும் கட்சியல்ல; தலைவர்களின் கையிலிருந்து மாறி -- அந்தக் கட்சி, தமிழகத்து மக்களின் கைகளுக்கு வந்திருக்கிறது; ஆகவே, இந்தக் கட்சியின் வாழ்வு மக்களின் கரங்களின் பத்திரமாக இருக்கிறது; இதைப் பிறரால் அழிக்க முடியாது!

இந்தக் கழகத்தை அழிக்க நானோ -- நாவலரோ -- அன்பழகனோ -- மதியழகனோ -- எம். ஜி. ஆரோ -- எஸ். எஸ். ஆரோ அல்லது யார் முயன்றாலும், எங்களைத் தடுக்கக் கோடிக்கணக்கான தமிழக மக்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள்; எனவே, தி. மு. கழகம் தனிப்பட்ட யாருடைய கையிலும் இல்லை -- கோடிக்கணக்கான தமிழ் மக்களின் பாதுகாப்பில்தான் இருக்கிறது!

கடமை உணர்வோடு -- கண்ணியத்தோடு -- கட்டுப்பாட்டு உணர்வோடு -- அடக்கத்தோடு -- ஆடம்பரமின்றி ஆர்வத்தோடு கழகத் தோழர்கள் பணியாற்றினால் தி. மு. கழகத்தை யாராலும் அழிக்க முடியாது! இதை நமக்குச் சொல்லத்தான், பல்லாயிரக் கணக்கான மக்கள் இதுபோன்ற கூட்டத்தில் ஒவ்வொரு நாளும் கூடுகிறார்கள் -- நமக்கு உற்சாகம் ஊட்டுகிறார்கள்!

எவ்வளவு பகை வந்தாலும் -- விஷமங்கள் வீசப்பட்டாலும் -- ஏசல் கணைகள் ஏவப்பட்டாலும் -- 'கொலை, கொள்ளையில் ஈடுபட்டவர்கள்' என்று பெருந் தலைவர்களே குற்றஞ் சாட்டினாலும் -- அதையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு நம்மீது நம்பிக்கை வைத்துத்தான் இதுபோல் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள்!

அவர்களது நம்பிக்கை மேலும் வலுப்பெறும் வகையில், நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி -- குடும்பப் பாசத்தை நம்மிடையே உருவாக்கிய அண்ணா வழியில் தொடர்ந்து பயணம் செய்ய நாம் உறுதிகொள்ள வேண்டும்."

--கழகத் தலைவர் கலைஞர்

(சிதம்பரம் பொதுக்கூட்டத்தில்)

குடிசை மாற்று வாரியத்திற்கு மத்திய உதவி இல்லை

சுகாதார--சாக்கடை வசதிகட்காக வாக்களித்த நிதியுதவியும் இன்னும் வந்து சேரவில்லை

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் விளக்கம்

சென்னை, ஆக. 21 --

"சென்னை நகரில் உள்ள 1,202 குடிசைப் பகுதிகளில், இதுவரையில் 1 041 குடிசைப் பகுதிகள் மற்றிக் கணக்கெடுப்பு நடந்து முடிந்துவிட்டது; 7 அல்லது 8 ஆண்டுக் காலத்தில் ரூ 40 கோடி செலவில் இந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது; இப்போது 65 பகுதிகளில் கட்டடம் கட்டும் வேலை நடந்துவருகிறது; அதில் 12 000 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன; 1973 மார்ச் மாதத்திற்குள் இது முடிந்துவிடும்.

"குடிசைப் பகுதிகளை மாற்றிக் கட்டடம் கட்டும் திட்டத்திற்காக மாநில அரசு 1971—72-ல் ரூ. 3.65 கோடியும், 1972—73-ல் ரூ. 3.45 கோடியும் ஒதுக்கியிருக்கிறது; ஆனால், குடிசைகளை மாற்றிக் கட்டிடங்கள் கட்டும் வேலைகளுக்கு மத்திய அரசு நிதியுதவி தரவில்லை.

"அந்தக் குடிசைப் பகுதிகளில் சுகாதார வசதி -- சாக்கடை வசதி -- விளக்கு வசதி போன்றவைகளுக்காக ரூ. 2.50 கோடி கடனுதவி தர மத்திய அரசு முன்வந்தது; அந்தக் கடன் தொகை இன்னும் வாங்கப்படவில்லை; அதைப் பெற முயற்சி எடுக்கப்படலாம் எனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் குடிசை மாற்றத்தில் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு நிதியுதவி செய்யவில்லை"

என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் தெளிவுற விளக்கிக் கூறினார்.

'சென்னை நகரத்தில் உள்ள குடிசைவாசிகளின் வசிப்பவர்களுக்கு மாற்றுக் கட்டடம் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி செய்கிறதா?' என்று, என். கிட்டப்பா கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு முதல்வர் கூறினார்.

தேவராசன் (தி.மு.க.):—"குடிசை மாற்று வாரியப் பணிகள், மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா?"

முதல்வர்:—"அது பற்றி இப்போது சொல்வதற்கில்லை."

கந்தப்பன் (தி.மு.க.):—"குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வசதியான வீடுகளுக்கு குறைந்த வாடகை வசூலிக்கப்படுவதால் அரசுக்கு இலாபமா? அல்லது இழப்பு எவ்வளவு? எதிர்காலத்தில் என்ன செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது?"

முதல்வர்:—"தண்ணீர்க் குழாய் -- விளக்கு வசதி போடப்பட்ட வீடுகளுக்கு ரூ. 50 வாடகை வசூலிக்க வேண்டியது இருக்க -- ஏழைகள் என்ற காரணத்தால் ரூ. 15 வீதம்தான் வாடகை வசூலிக்கப்படுகிறது; இதனால் ரூ. 35 மானியமாகக் கொடுக்கப்படுகிறது; காலக்கட்டத்தில், இந்த நட்டம் அதிகமாகக்கூடும்; ஆகவே, குடிசை மாற்று வாரிய வளர்ச்சிப் பகுதிகளில் வருமானத்தைப் பெருக்குவதற்காகச் சிற்றுண்டிச்சாலைகள் -- கடைகளுக்கான இடங்களைத் திறக்க யோசித்து இருக்கிறோம்; சில இடங்களில் செய்தும் இருக்கிறோம்."

இரஷ்யாவிலிருந்து மண்ணெண்ணெய்

இந்தியாவுக்கு, 80,000 டன் மண்ணெண்ணெய் (கிரோசின்) அனுப்ப இரஷ்யா ஒப்புதல் தெரிவித்திருக்கிறது; இதன் மதிப்பு, ரூ. 2 கோடியே 16 இலட்சமாகும்.

யானைக்கால் நோய்த் தடுப்பு

சென்னை மாநகராட்சியின் திட்டம்

துவக்கிவைத்துப் பேராசிரியர் க. அன்பழகன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 20—

ரூ. 20 இலட்சம் செலவிலான யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தொடக்கிவைத்தார்.

கொசு ஒழிப்புக்கான மருந்து தெளித்தல் -- நோய்த் தடுப்பு நடவடிக்கை -- நோயாளிகளுக்குத் தனிச் சிகிச்சை -- யானைக்கால் நோய்க்குக் காரணமாக உள்ள கொசுக்களை விஞ்ஞான ரீதியில் ஆராய்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஓராண்டுக்கு சுமார் ரூ. 20 இலட்சம் செலவிடும்; இத்திட்டத்தின் கீழ் சுமார் 500 பேருக்கு வேலை கிடைக்கும்.

மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் வி. முனுசாமி அனைவரையும் வரவேற்றார்; 'மலேரியா ஒழிப்பு நடவடிக்கைக்காக மாநகராட்சிக்கு 25 சதவிகிதம் மானியம் வழங்க வேண்டும்' என்று கோரினார்.

மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் தலைமைவகித்துப் பேசுகையில், பொதுமக்கள் ஒத்துழைப்பைக் கோரினார்.

மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் ஜே. ஏ. அம்பாசங்கர், சித்திரை என்ற நோயாளிக்கு மாத்திரைகள் தந்து முதலாவது சிகிச்சையைத் தொடங்கிவைத்தார்.

மாநகராட்சி நல்வாழ்வு நிலைக் குழுக் தலைவர் மு. அரங்கநாதன் நன்றி கூறினார்.

பேராசிரியர் அன்பழகன்

யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இத்திட்டம் தமிழகத்தில் வேறு பல இடத்திலே நடைபெற்று வந்தாலும், சென்னை மாநகரில் இத்திட்டத்தை துவக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு வலமுறை எடுத்துச் சொல்லி வந்தது; அதன் பலனாக இப்போதுதான், இந்நோய் ஒழிப்புக்காக ஏறத்தாழ ரூ. 25 இலட்சம் ஒதுக்க மத்திய அரசு முன்வந்திருக்கிறது.

யானைக்கால் நோய் என்பது கால் வீங்கி -- தோல் தடித்த பிறகுதான் நோயாளிக்கே தெரிய வரும்.

இந்நோய் மற்றியவரைப் பரிசோதிப்பதென்பது பகலில் முடியாது; இரவில், இந்நோய் கண்டவர்கள் தூங்கும்போதுதான், இரத்தத்தில் உள்ள அந்த நோய்க் கிருமிகள் தோலின் மேல்மட்டத்திற்கு வரும்; ஆகவே, யானைக்கால் நோய் உள்ளவரைப் பரிசோதிப்பதென்பது இரவில்தான் முடியும்.

சிறு சிறு குட்டைகளில் நீர் தேங்குவதைத் தவிர்ப்பதன் மூலமும் -- கொசுப் பெருக்கத்தை ஒழிப்பதன் மூலமும் -- எல்லா இடங்களிலும் மருந்து தெளிப்பதன் மூலமுமே இந்த நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

இப்படிச் செய்வதென்பது அதிகாரிகளின் பணியாக மட்டுமே இல்லாமல், பொதுமக்களின் பணியாகவும், நகராட்சியிலுள்ள சாதாரண ஊழியர்களின் பணியாகவும் இருக்கவேண்டும்.

கொசுக்களை ஒழித்தால்தான் இந்த நோயைத் தவிர்ப்பதும் முடியும்.

அறிவு என்பது எல்லோர்க்கும் பொது; அதைத் தேடி விரிவாக்கிக் கொள்வதே திறமையாகும்.

யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்த நோய் பெரும்பாலாகப் பரவும் இடங்களில் எல்லாம் இந்த யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரிவாக்க எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டும்."

புற்றுநோயை ஒழிக்கத் தனிவரி

அனைத்து கட்சிகளும் ஒப்புக்கொள்ளவேண்டும்

மேலவையில் அமைச்சர் க. அன்பழகன் கருத்துரை

சென்னை, ஆக. 21—

"காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள 15 கிராமம் வட்டாரத்தில் நடத்தப்பட்ட சோதனையில் தாய்மார்களுக்கு பிரப்பு உறுப்பிலும் -- ஆண்களுக்கு வாயிலும் பெரும்பாலானவர்களுக்குப் புற்றுநோய் கண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

'புற்றுநோய்போன்ற கொடிய நோய்களைத் தொடக்க ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்து குணப்படுத்துவதற்கு அரசுக்கு நிறைய பணம் தேவைப்படும்; எனவே, இது போன்ற நல்ல காரியங்களை நிறைவேற்றுவதற்காகப் பொதுமக்களுக்குத் தலைக்குத் தலை வரி போட்டால்தான் முடியும்; இதற்கு எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டால், சமுதாய நன்மையைக் கருதி அரசு செய்யலாம்"

என்று, சட்டமன்ற மேலவையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையிலும் புற்றுநோய்பற்றிக் கேள்வி கேட்கப்பட்டது; அதன் விவரம் வருமாறு:—

கோவை செழியன் (தி.மு.க):—"சிகரெட்டு குடிப்பதாலும், பொடி போடுவதாலும்தான் புற்றுநோய் வருகிறது; ஆகவே, மேல் நாட்டில் சிகரெட்டுப் பெட்டிமீது எச்சரிக்கையை அச்சடிக்கிறார்கள்; இங்கு சிகரெட்டு குடிக்க -- பொடிபோட தடை செய்யப்படுமா? அல்லது புகை பிடிப்பதற்கு பெர்மிட்டாவது வழங்கப்படுமா?"

அமைச்சர் அன்பழகன்:—"புற்றுநோய் வருவதற்குக் காரணம், புகையிலை சேர்ந்த சிகரெட்டு குடிப்பது -- பொடி போடுவது போன்றவையும் ஆகும் என்றுதான் சொல்கிறார்கள்; அது மட்டும்தான் காரணம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை; தமிழ்நாட்டில் அப்படி எச்சரிக்கை அச்சடித்து வெளியிடுவது என்றால், பிறகு அதைப் படித்துக் காட்டுவதற்குக்கூடவே ஒரு ஆளையும் அனுப்பவேண்டியிருக்கும்; ஆகவே நல்ல பழக்க வழக்கங்களை பரப்புவதன் மூலம் தீய வழக்கங்களை ஒழிக்க முடியும்.

சென்னையில் மழைநீர் வடிகால்கள்

மாநகராட்சிக்கு அரசு தாக்கீது

சென்னை, ஆக. 20—

"சென்னை நகரில் மழைக் காலங்களில் தாழ்வான தெருக்களில் நீர் தேங்குவதைத் தடுக்கவும் -- வடிகால் வசதி செய்து கொடுக்கவும் பெருந் திட்டம் ஒன்றைத் தயாரித்துச் செயல்படுத்தும்படி சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அரசு தாக்கீது அனுப்பி உள்ளது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

10 இலட்சம் பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை

தமிழக அரசின் ஐந்தாண்டுத் திட்டம்-- அமைச்சர் அன்பழகன் விளக்கம்

சென்னை, ஆக. 20—

"1970, 1971, 1972-ம் ஆண்டுகளில் கண் தானம் செய்தவர்கள் எத்தனைப் பேர்? சிறைக் கைதிகள் எவரேனும் கண்தானம் செய்துள்ளனரா?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பா வினவினார்.

அமைச்சர் க. அன்பழகன்:—"1970—71-ல் மதுரை மாவட்டத்திலிருந்து 30 பேர்களும், சென்னை மாவட்டத்திலிருந்து 3 பேர்களும் கண்தானம் செய்திருக்கின்றனர்.

"1971—72-ல் மதுரை மாவட்டத்திலிருந்து 8 பேர்களும், முகவை மாவட்டத்திலிருந்து ஒருவரும், சென்னை மாவட்டத்திலிருந்து ஒருவரும் கண்தானம் செய்தனர்.

"1971-ல், சென்னை மத்திய சிறைச்சாலைக் கைதிகள் இருவர் கண்தானம் செய்தனர்."

பாலகிருஷ்ணன் (தி. மு. க):—"புரட்சிகரமான திட்டம் என்று எல்லோராலும் கருதப்படுகின்ற முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் திட்டத்துக்கு மாநில அரசு எவ்வளவு பண உதவி செய்கிறது?"

அமைச்சர்:—"ஓராண்டில் கண்ணில் சதை வளர்ச்சி அறுவைச் சிகிச்சைக்காக ஓர் இலட்சம் பேருக்குச் சிகிச்சை செய்வது என்றால், ஆண்டுக்கு ரூ.60 இலட்சம் முதல் ரூ. 70 இலட்சம் வரை செலவாகும்.

"சதை வளர்ச்சி அறுவைச் சிகிச்சையைத் தவிர, வேறு கண் நோய் சிகிச்சை செய்து கொள்ளக் கூடியவர்களையும் கணக்கில் சேர்த்தால், மேலும் 7-இலட்சம் பேரைச் சேர்த்து -- ஆக ஆண்டுக்கு 8-இலட்சம் பேருக்குக் கண் சிகிச்சை செய்வதற்கு ரூ. 1-கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டது.

"இந்த நேரத்தில் ரூ. 1-கோடி வீதம் ஆண்டுக்குச் செலவு செய்வது என்பது இயலாத நிலையில் இருப்பதால், வசதி உள்ளவர்களிடம் சிகிச்சைக்காக நன்கொடை வசூலித்ததில், இதுவரையில் முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதிக்காக ரூ. 26 இலட்சம் சேர்ந்திருக்கிறது; மேலும் நல்ல முறையில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முயற்சி நடக்கிறது; இதுவரையில் 10 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

விரும்பிக் கொடுத்தால்தான் கண் தானம் பெறப்படும்

தேவராசன் (தி. மு. க.):—"தூக்குத் தண்டனை அடையும் கைதிகளின் கண்களும் தானமாகப் பெறப்படுமா? தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் கண்களை எடுத்துச் சேமித்து வைத்துத் தேவைப்பட்டவர்களுக்கு உதவலாம் அல்லவா?"

அமைச்சர்:—"மற்ற கைதிகளை விடத் தூக்குத் தண்டனை பெற்றோரின் உரிமைகள் அதிகமாக மதிக்கப்படுகிறது; மற்ற எதையும்விட கண்களைத்தான் மிக உரிமை உள்ளதாக அவர்கள் வைத்துக் கொள்வார்கள்; எனவே, அவர்களாக விரும்பிக் கொடுத்தால்தான் கண்தானம் ஏற்கப்படும்.

"தூக்குத் தண்டனை அடைந்தவர்களுடைய கண்களைத் தோண்டி எடுத்துவிடுவதால், குழிவிழுந்து கோரமாகக் காட்சி அளிக்கும் என்று தவறாகக் கருதப்படுகிறது; அதுபோன்ற நிலை இருப்பதில்லை; கண்ணில் உள்ள சிறு சதையை மட்டும் (கார்னியா)தான் எடுப்பார்கள்; மற்றபடி உடல் கோரமாக ஆகிவிடாது; இதனை உணர்ந்து நம்மைப் போன்றவர்களே இந்தத் திட்டத்திற்கு உதவ முன்வர வேண்டும்."

என். கிட்டப்பா (தி. மு. க.):—"கண்தானம் செய்கின்றவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் என்ன?"

அமைச்சர்:—"தியாகத்திற்கு விலை மதிப்பிட அரசு விரும்பவில்லை."

காளிமுத்து (தி.மு.க.):—"தமிழ் நாட்டில் கண் பார்வை இழந்தவர்கள் எத்தனைப் பேர் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா?"

அமைச்சர்:—"மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில்தான் இந்தக் கணக்கு ஏறக்குறைய எடுக்கப்பட்டிருக்கிறது; இரண்டு கண்களிலும் சதை வளர்ந்திருப்பவர்கள் சுமார் 6-இலட்சம்பேர்; ஒரு கண்ணில் மட்டும் சதை வளர்ந்திருப்பவர்கள் 3 அல்லது 4-இலட்சம் பேர்; இவர்கள் 40 முதல் 55 வயதுக்குட்பட்டவர்கள் ஆகும்.

"மிகப் பெரும்பாலானவர்கள் ஏழ்மை நிலையில் உள்ள காரணத்தாலும் -- சத்துணவு இல்லாத காரணத்தாலும் கண் பார்வை இழந்திருக்கின்றனர்; சதை முற்றிப் பழுத்த கட்டத்தில்தான் அறுவைச் சிகிச்சை செய்ய முடியும்.

"ஐந்தாண்டுக் காலத்தில் 10 இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அரசு எண்ணியிருக்கிறது; ஆகவே, இத்திட்டம் பரவலாக்கப்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது."

'வெளிநாட்டினரைவிட விவேகம்மிக்கவர் நாம்'

திறமைமுழுவதும் பயன்படுத்தி முன்னேற வேண்டும்

காரைக்கால் மகளிர்க் கல்லூரி திறப்புவிழாவில் நெ. து. சுந்தரவடிவேலு உரை

புதுவை, ஆக. 20—

காரைக்கால் அருகிலுள்ள தாளத் தெருவில், ஔவையார் அரசினர் மகளிர் கல்லூரியை சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு துவக்கி வைத்தார்; அவர் தமது உரையில் கூறியதாவது:—

"நல்வாழ்வுப் பணியில் பெண்களுக்கும் சம வாய்ப்புகள் இருக்கவேண்டும்.

நம் நாட்டில் உள்ள ஆண்களும் -- பெண்களும் வெளிநாடுகளிலுள்ள ஆண்களையும் -- பெண்களையும் காட்டிலும் அதிக விவேகமுடையவர்கள்.

மாணவர்கள் தங்களது திறனை அதிகப்பட்சமாகப் பயன்படுத்தி உயரவேண்டும்."

புதுவை முதல்வர் தகவல்

விழாவுக்குப் புதுவை முதல்வர் எம். ஓ. எச். பாரூக் தலைமை வகித்தார்; 'கல்விக்காகப் புதுவை அரசு ரூ. 2 கோடி ஒதுக்கியுள்ளது' என்று அவர் சொன்னார்.

காரைக்காலில் இரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சர் எஸ். ஆறுமுகம் கூறினார்.

காரைக்காலுக்குத் தனி மகளிர் கல்லூரி என்ற கனவு நனவாகிவிட்டது" என்று உள்துறையமைச்சர் ராமசாமி குறிப்பிட்டார்.

கல்லூரி முதல்வர் திருமதி செல்வி கலாவதி நன்றி கூறினார்.

நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றம்

சென்னை, ஆக. 21—

வருவாய்த்துறை பிர்கா ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் 746 பேரின் பதவியை இளநிலை உதவியாளர்கள் நிலையிலிருந்து உதவியாளர்கள் நிலைக்கு உயர்த்தியிருப்பதாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் அறிவித்தார்.

"இதன்மூலம், வருவாய்த் துறையில் கீழ்நிலை ஊழியர்களின் நீண்டநாளைய கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது" என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

தலைமைக் கழக அறிக்கை

'மாநில சுயாட்சிப் பிரச்சார அணி' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி--அதற்கு, 'தலைமை நிலையம்' என்ற ஒன்றை அமைத்து--அதற்குக் கிளை அமைப்புகளை உருவாக்கி வருவதாகவும், அதற்காக உறுப்பினர்களைச் சேர்த்துவருவதாகவும் தலைமைக் கழகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அமைப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுமதியையோ ஆதரவையோ பெற்று இயங்குவது அல்ல.

மாநில சுயாட்சிக் கொள்கையை எவ்வாறு மேற்கொள்வது--எப்படிப் பரப்புவது என்பது பற்றித் தி.மு. கழகம் முறையான முயற்சியை மேற்கொண்டு வருவதால், இதற்காகத் தனி அமைப்பு நிறுவுவது கழகக் கட்டுப்பாட்டுக்கு மாறுபட்டதாகும்.

எனவே, தி.மு. கழகத் தோழர்களும்--ஆதரவாளர்களும், 'மாநில சுயாட்சிப் பிரச்சார அணி' என்கின்ற புதிய அமைப்புக்கு எந்த வகையிலும் ஆதரவு அளிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவகம்'
சென்னை-13
19-8-1972

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

கோயில் அறங்காவலர்கள் வாரியம்

அமைப்பதுபற்றி அரசு ஆலோசனை

மேலவையில் அமைச்சர் கண்ணப்பன் தகவல்

சென்னை. ஆக. 22—

"கோயில் அறங்காவலர்கள் மேம்பாட்டு வாரியம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது"

என்று அறநிலையத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் சட்டமன்ற மேலவையில் அறிவித்தார்.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை (திருத்த)ச் சட்டம் மேலவையில் நிறைவேறியது.

இதையொட்டி நடைபெற்ற விவாதத்தில், குன்றக்குடி அடிகளார் -- சா. கணேசன் -- இராஜா அய்யர் -- எதிர்க் கட்சித் தலைவர் இராசாராம் நாயுடு ஆகியோர் பொதுவாகச் சட்டத் திருத்தத்தை வரவேற்றனர்.

குன்றக்குடி அடிகளார் பேசுகையில், 'ரூ 20,000-த்திற்கு மேற்பட்ட வருவாயுள்ள கோவில்களில் மூன்று அல்லது ஐந்து பேர் அறங்காவலர்களாக நியமிக்கப்படும்போது, அவர்களில் ஒருவர் கட்டாயமாகத் தாழ்த்தப்பட்ட அல்லது மலைவாழ் இன மக்களில் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்' என்ற சட்டத் திருத்தத்தை வரவேற்றார்.

தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வருவதற்கு வழி செய்யும் சட்டத் திருத்தத்தின் சில பகுதிகள் செல்லுபடியாகாது எனத் தலைமை நீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி, அதனைச் செல்லுபடியாக்கத்தக்க வழிவகை செய்யாவிடில், சாதிகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கத் தவறியவர்கள் ஆவோம்' என்றார்.

விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் மு கண்ணப்பன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தகுதியுள்ள எவரும் அர்ச்சகராகலாம் என்பதே இந்த அரசின் கொள்கையாகும்.

'தாழ்த்தப்பட்ட குடிமகனுக்கும் அந்த உரிமை இருக்க வேண்டும்' என்பதே முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விருப்பமாகும்.

இது குறித்து அரசு இயற்றிய சட்டத்தின் சில விதிகள் உயர் நீதிமன்றத்தால் ஆட்சேபிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அதனை எந்த முறையில் செய்தால் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி அரசு ஆலோசித்துவருகிறது.

அர்ச்சகர்கட்கு என்று தனிப்பட்ட பயிற்சிப் பள்ளி ஏற்படுத்துவது பற்றி அடிகளார் குறிப்பிட்டார்கள்; அது பற்றியும் அரசு பரிசீலித்துவருகிறது.

முறையான பயிற்சி கொடுப்பதன் மூலம் அதற்குரிய தகுதியை எவரும் பெறலாம்--என்ற ஏற்பாட்டைச் செய்வது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

கோவில் நிதியிலிருந்து கோவில் திருப்பணிகள்தான் செய்யலாம் --என்று சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள்; கோயில் திருப்பணிக்கு இந்த அரசு எந்த அளவுக்குச் செலவிட்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்; சுதந்தரா கட்சித் தலைவர் சா. கணேசன் அவர்களே பல திருப்பணிக் குழுக்களில் இருந்திருக்கிறார்.

பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன; ஆகவே அத்தகைய பணிகள் விடப்படவில்லை --தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆகவே, கோவில் நிதியிலிருந்து சமுதாய நலனைக் கருதி, கல்வி நிலையங்கள் நடத்துதல் -- அனாதை விடுதிகள் நடத்துதல் -- பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்கு உதவுதல் -- பார்வையற்றோருக்குக் கண்ணொளி வழங்குதல் போன்ற நற்காரியங்களுக்குச் செலவிடுது தவறு ஆகாது; சமுதாய மக்கள் வாழ்வு வளம் பெற்றால்தான், இறை பணியின் முக்கியக் குறிக்கோள் ஈடேறும் --இறை வழிபாடு சிறக்கும்.

இன்றைக்கும் பல்வேறு மதங்களின் சார்பாக இத்தகைய பணிகள் நடைபெற்று வருகின்றன; அதுபோல் இந்துச் சமயத்தின் சார்பிலும் செய்யப்படுவதன் மூலம் மத மாற்றங்களைத் தவிர்ப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மற்றும், 'கோவில் அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் இறை வழிபாட்டில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்' என்ற கருத்தைச் சொன்னார்கள்; இறை வழிபாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள்; அப்படி நியமிக்கப்படாததுபோல் பேசுவது சரியல்ல.

'அறங்காவலர் மேம்பாட்டு வாரியம் ஒன்றை ஏற்படுத்தி--இந்து சமய அறத்துறையைச் செம்மைப்படுத்திட வகை செய்திட வேண்டும்' என்று அடிகளார் குறிப்பிட்டார்கள்; இது குறித்து விதிகளை ஒன்றுபடுத்தி--மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவது பற்றியும் அரசு ஆலோசித்துவருகிறது."

15 ஊராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டம்

உலக பாங்கியிடம் நிதியுதவி பெற முயற்சி

சென்னை, ஆக. 18—

"கோயமுத்தூர் நெல்லித்துறை குடிநீர்த் திட்டத்திற்கு உலக வங்கியிடம் அரசு ஏதேனும் நிதி உதவி கேட்டுள்ளதா?"

என்று, சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் கலைஞர் கூறியதாவது:—

"கோயமுத்தூர் சிங்கநல்லூர் போன்ற நகராட்சிகளுக்கும், ஏனைய 15 ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்கிட வகை செய்வதற்கான நெல்லித்துறை நீர் வழங்குத் திட்டத்திற்காக உலக வங்கிக் குழுவினரிடம் தமிழ்நாடு நீர் வழங்கல் -- கழிவு நீர் அகற்றும் வாரியம் தனது திட்டத்தைக் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்பவேண்டும் என்று உலக வங்கிக்கும் கோரியது; நீர்ப் பகிர்வு முறையின் போதுமான -- திட்டத்திற்கான நிதியுதவி -- திட்டத்தின் பொருளாதார ஊட்டம்போன்ற இத்திட்டத்தின் சில கூறுகளைப் பற்றிய விவரங்களை உலக வங்கிக் குழு கேட்டது; உலக வங்கிக் குழுவினரால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் திட்டத்தை வகுத்த பிறகு, இந்திய அரசின் மூலமாக இத்திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்படவேண்டும்."

கேள்வி:—"உலக வங்கி பணம் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளதா?"

முதல்வர்:—"இது குறித்துத் திட்டவட்டமான பொறுப்பு எதையும் வங்கிக் குழுவினர் மேற்கொள்ளவில்லை; உலக வங்கிக் கடன் தரவில்லையெனில், எல். ஐ. சி. மூலம் கடன் பெற முயற்சி மேற்கொள்ளப்படும்."

மணப்பாறைக்குக் குடிநீர்த் திட்டம்

சௌந்தர பாண்டியன்:—"மணப்பாறைக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?"

முதல்வர்:—"ஆம்"

சௌந்தரபாண்டியன்:—"தற்போது அது எந்த அளவில் உள்ளது?"

முதல்வர்:—"இப்பொருள் பரிசீலனையில் உள்ளது; காவிரி -- பொன்னணி--தேக்கு மலையாறு ஆகிய ஆறுகளிலிருந்து குடிநீர் வழங்க வகை செய்யும் இந்தத் திட்டத்தில் காவிரி ஆற்றிலிருந்து கொண்டு வந்தால் அதற்கு 88 இலட்சம் செலவு ஆகும்; இதனை நகராட்சி திருப்பித் தருவதில் உள்ள சிரமத்தை எண்ணிப் பொன்னணி ஆற்றிலிருந்து கொண்டுவரலாம் என்றால்--அதற்கும் 78 இலட்சம் செலவாகும் என்று தெரிகிறது; அப்படிக் கொண்டுவரும்போது, ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா என்றும் கவனிக்க வேண்டியுள்ளது; அதைவிட, தேக்கு மலையாறு 23 மைல் தொலைவில் இருக்கிறது; விரைவில் இவை குறித்துப் பரிசீலிக்கப்படும்."

பம்பாய் -- மாதுங்கா குறள் வளர்ச்சி மன்றம்

பம்பாய் -- மாதுங்கா லேபர் கேம்ப் பேரறிஞர் அண்ணா குறள் வளர்ச்சி மன்றக் கூட்டம் 23—7—72 அன்று அவைத் தலைவர் பெ. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, பேரறிஞர் அண்ணாவின் 64-வது பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக நடத்தத் தாயகத்திலிருந்து இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. 'நம் நாடு' துணை ஆசிரியர் மா. செங்குட்டுவன், முன்னாள் மேயர் சா. கணேசன் ஆகியோரை அழைப்பதெனவும், அதையொட்டி மலர் ஒன்று வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அவைத் தலைவர் பெ. வேலாயுதம் தலைமையில் 11 பேர் கொண்ட வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது.

மலர்க்குழு -- கரந்தை வேலன் தலைமையில் கொ. வள்ளுவன், பெ. வேலாயுதம், கா. பழனி, நெல்லை சோமு ஆகியோரை உறுப்பினர்களாகக்கொண்டு தேர்தெடுக்கப்பட்டது.

விளம்பரக் குழுவுக்கு நெல்லை வளவன் தலைவராகவும், கே. இராமநாதன் -- சி. முருகேசன் -- ஏ. இராயப்பன் ஆகியோரும் உறுப்பினராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விழா, அக்டோபர் திங்கள் 14, 15-ம் நாட்களில் நடைபெறும்.

பட்டா நிலக்காரர்களுக்குப் பாஸ் புத்தகம்

அறிஞர் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்படும்

— ★ —

பினாமி நடவடிக்கைகள் தவிர்க்கப்படும் -- 30 ஆயிரம் ஏக்கர் நிலம் உபரியாகக் கிடைக்கும்

மேலவையில் சட்டத் திருத்தம் -- விவாதங்களுக்கு அமைச்சர் ப. உ. சண்முகம் பதில்

சென்னை, ஆக. 22—

"பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப். 15-ம் நாளன்று நிலப் பட்டாதாரர்களுக்கு முதன் முதலாகப் 'பாஸ் புத்தகம்' (அடையாள அட்டை) வழங்கப்படும்; அதில், நிலவுடைமையாளரின் பெயர்-- அவரது நிலத்தின் அளவு--நிலத்தின் தரம்--கடன் முதலிய விவரங்கள் முழுமையாக அடங்கியிருக்கும்.

"நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் பினாமி நடவடிக்கைகளை--நில மாற்றங்கள் செய்வதை இது தடுக்கும்.

"விதிவிலக்குகள் அளிக்கப்பட்ட பிறகு இப்பொழுது போட்டுப்பார்த்துள்ள தோராயக் கணக்குப்படி சுமார் 25,000 ஏக்கர் முதல் 30,000 ஏக்கர் நிலங்கள் உபரியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது"

என்று சட்டமன்ற மேலவையில், வருவாய்த் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள் விளக்கித் தெரிவித்தார்.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த 3-வது திருத்த மசோதாமீது நேற்று விவாதம் நடந்தது.

அறக்கட்டளைகள் சார்பில் நடைபெறும் கல்லூரி--பள்ளிக்கூடங்கள் ஆகியவை வருமானத்துக்காக வைத்துக்கொண்டுள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கும் சட்டத் திருத்தமாகும் இது.

அமைச்சர் பதில்

இம்மசோதா மீது நடைபெற்ற விவாதத்துக்கும் பதிலளிக்கையில் அமைச்சர் ப.உ. சண்முகம் கூறியதாவது:—

"நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் கிடைத்த நிலங்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்ட என்பதல்ல பிரச்சினை; நிலப் பிரபுத்துவத்தை எந்த அளவுக்கு இந்தச் சட்டங்களால் அழித்தோம் என்பதுதான் முக்கியம்--என்று இந்த அரசு கருதுகிறது.

முந்தைய நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் 38,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த அரசு பிரகடனப்படுத்தியது; இதில் ஏறத்தாழ 22,000 ஏக்கர் நிலம் 11,000 நிலமில்லாத ஏழைகளுக்கு வழங்கப்பட்டது.

தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தச் சட்டங்கள் மூலம் அரசுக்கு ஏறத்தாழ 25,000 முதல் 30,000 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று அரசு நம்புகிறது.

எவருக்கும் பயந்துகொண்டு 'டிரஸ்டு'களுக்கும் -- அறநிலையங்களுக்கும்--கோயில் நிலங்களுக்கும் விதிவிலக்குகள் அளிக்கப்படவில்லை; இந்த விதிவிலக்குகள். மக்கள் மனம் பண்பட்ட பிறகு கண்டிப்பாக நீக்கப்பட்டுவிடும்.

தண்ணீர்ப் பந்தல் போன்றவைகளுக்குக் கொடுக்கப்பட்ட உச்சவரம்பு, சட்டச் சிக்கல் காரணமாகக் கொண்டுவரப்பட்டதே தவிர, இவற்றுக்குச் சலுகை தர வேண்டும் என்பதற்காக அல்ல.

அடையாளக் கார்டு

ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்; அண்ணா பிறந்த நாளான இந்த ஆண்டு செப்டம்பர் 15-ந் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள நிலச் சொந்தக்காரர்களுக்குப் 'பட்டா பாஸ் புத்தகங்'களை வழங்க இருக்கிறார்; நிலம் யார் பேருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவருக்கு இந்த அடையாளக் கார்டு தரப்படும்; அவர் எந்தவித அச்சமுமின்றி நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; இதன் மூலம், 'பினாமி' நில மாற்றங்கள் ஒழிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அறக்கட்டளைகள் நடத்தும் கல்லூரி -- கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு, 'இவ்வளவுதான் நிலம் வைத்துக்கொள்ளலாம்' என்று உச்சவரம்பு விதித்துள்ள அரசு, அந்த உச்சவரம்புள்ள அளவுக்குக் கூட நிலத்தை வாங்கத் தடை விதிக்கும் அளவில் சட்ட விதிகள் வைத்திருப்பது சரிதானா-- என்ற கேள்வியும் இங்கு எழுப்பப்பட்டது.

அறக்கட்டளைகள் நடத்தும் கல்லூரிகள். தங்கள் கல்லூரிகளை விரிவுபடுத்த நிலம் வாங்குவது தடை செய்யப்படவில்லை; ஆனால், தங்களின் வருமானத்துக்காக விவசாயம் நடத்த நிலங்கள் வாங்குவதுதான் தடுக்கப்பட்டிருக்கிறது."

இன்டர்மீடியட் வகுப்பு

மீண்டும் துவக்குவது பற்றி கல்வியமைச்சர் நாவலர்

சென்னை, ஆக. 21—

சட்டப் பேரவையில், 'கல்லூரிகளில் மீண்டும் இன்டர்மீடியட் வகுப்பு வருமா வராதா என்பது பற்றி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அதற்கு அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு :—

என். கே. பழனிச்சாமி (வலது கம்.):—"கல்லூரியில் புதுமுக வகுப்புக்குப் பதிலாக இரண்டாண்டு இண்டர்மீடியட் வகுப்பு தொடங்கப்படுமா ?"

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் :—"இதுபற்றித் தமிழ்நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் வெவ்வேறு கருத்துக்களைக் கூறி வருகிறார்கள்; ஆகவே, அந்தந்தப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை அழைத்துப் பேசி முடிவு எடுக்கப்படும்."

வீராசாமி (தி. மு. க.):—"தமிழ் நாட்டு வரலாற்றைப் புதிதாகத் தயாரிப்பதற்காக மத்திய அரசிடம் நிதியுதவி கேட்கப்பட்டதா ?"

அமைச்சர் :—"தமிழ்நாட்டு வரலாற்றைப் புதிதாக எழுதுவது பற்றி ஐக்கிய நாடுகள் கலாச்சார நிறுவனத்திடம் நிதியுதவி கேட்பதற்கு வரலாற்றுக் குழு ஏற்பாடு செய்துவருகிறது; அதேபோன்று, மத்திய அரசிடம் ரூ. 10 இலட்சம் கேட்பதற்கும் அந்தக் குழு தீர்மானம் போட்டிருக்கிறது -- கேட்கப்படும்."

ஏழைக்குப் பலனளிக்கும் மற்றொரு நடவடிக்கை

கடன் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்குச் சட்டம்

சட்டப் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

சென்னை, ஆக. 22—

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்ட மசோதா-- கூட்டுக் குழு திருத்தியமைத்தவாறு--சட்டப் பேரவையில் நிறைவேறியது.

மசோதாவைக் கொண்டுவந்து அமைச்சர் ஓ பி இராமன் பேசுகையில், 'திருத்தியமைக்கப்பட்டுள்ள இந்த மசோதா 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குமுன் கடன் பெற்றுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது' என்றார்.

மாதம் ரூ 200-க்குமேல் வருமானம் இல்லாதவர்களுக்கு இந்தச் சட்டத்தினால நன்மை கிடைக்கும்.

இந்தச் சட்டத்தின் முக்கிய விதிகளாவன :—

மாதம் ரூ 200-ம் அதற்குக் குறைவாகவும் வருமானமுள்ளவர்கள் கடன் தொல்லையிலிருந்து மீளுவதற்கு இந்தச் சட்டம் உதவும்.

இந்த ஆண்டு மார்ச் 1-ந் தேதிக்குமுன் இவர்கள் கடன் வாங்கியிருந்தால் உயர்ந்தபட்ச வட்டி விகிதம் 9 சதவிகிதமாகக் கணக்கிடப்படும்.

கடன்பட்டவர் இதுவரையில் வட்டியாகச் செலுத்திய தொகை அசலைப் போல் இருமடங்கும் அதற்கு மேலும் ஆகியிருந்தால் அவர்கள் மேற்கொண்டு எந்தத் தொகையும் செலுத்த வேண்டியதில்லை; அசலையும்-வட்டியையும் கட்டிவிட்டதாகவும்--கணக்கு தீர்ந்துவிட்டதாகவும் கருதப்படும்.

வருமான வரி--விவசாய வருமான வரி--தொழில் வரி கட்டுகிறவர்களுக்கு இந்தச் சலுகைகள் பொருந்தாது.

இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்கு அமைச்சர் செ. மாதவன் பதில் கூறுகையில் குறிப்பிட்டதாவது :—

"இதனை ஏதோ 'லேவாதேவி சட்டம்' போன்று எண்ணி உறுப்பினர்கள் சிலர் பேசியிருக்கின்றனர்; அது தவறு; இது, சமுதாயத்தில் அடிதளத்தில் உள்ளவர்கள்—கடன்வாங்கி அல்லல்படும் பிரிவினருக்கு நன்மை செய்ய— அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.

இந்தச் சட்டம், முன் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கருதுவது தவறு; முதலமைச்சர் சட்டமன்றத்தில் அறிவித்த நாளிலிருந்து செல்லும் என்றுதான் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது."

9 சதவிகிதம்வரை வட்டி வசூலிக்கலாம் என்று இருப்பதைக் குறிப்பிட்டு அமைச்சர் பேசுகையில், 'லேவாதேவிச் சட்டத்திலேயே 12 சதவிகிதம்வரை வட்டி அனுமதிக்கப்பட்டுள்ளது' என்று சுட்டிக் காட்டினார்.

2,760 பர்மா அகதிகளுக்கு வீடுகள்

ரூ.1,13,16,000 செலவில் கட்டப்படும்

இலவச மனை -- ரூ. 4,100 வரை கடன் -- அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, ஆக. 21—

வியாசர்பாடியில், பர்மா தமிழர் அகதிகளுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றதா? அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பா வினவினார்; அதற்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து பதில் அளித்ததாவது :—

"பர்மா அகதிகளுக்காக வியாசர்பாடியில் 2,760 வீடுகள் ரூ. 1,13,16,000 செலவில் கட்டித் தருவதற்காக அரசு சார்பில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது; அதற்காக ஒவ்வொருவருக்கும் மூன்று சென்ட் நிலம் இலவசமாகத் தரப்படுகிறது; வீடுகளைத் தனித் தனியாகக் கட்டிக்கொள்ள ரூ. 4,100 வரையில் கடன் தகுதி அளிக்கப்பட்டிருக்கிறது; இந்தப் பணியினை வீட்டு வசதி வாரியம் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இரண்டு ஆண்டுகளில் இதனை முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

ஏ. எம். இராஜா :—"பர்மா அகதிகளுக்குமாடி வீடுகள் அமைக்கப்படுமா? அகதிகள் வீடுகள் கட்டிக்கொள்ள மூன்று சென்ட் நிலம் வீதம் இலவசமாக அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது; அப்படி இல்லாமல் மாடிக் கட்டடங்களாக அமைத்துக் கொடுத்தால் இடமும் மிச்சப்படுமல்லவா ?"

அமைச்சர் :— 'வியாசர்பாடியிலுள்ள பர்மா தமிழர்கள், தங்களுக்குத் தனித் தனியான வீடுகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால்தான் அப்படி ஏற்பாடு செய்யப்படுகிறது; அவர்கள் மாடி வீடுகளாகக் கட்டித் தரும்படி கேட்டு முன்வந்தால் அப்படியே கட்டித் தரப்படும்."

இந்தி ஆதிக்கத்தின் பிடியில் இந்தியா!

வெள்ளி விழா வெளிப்படுத்திய உண்மை

"சுதந்தர நாளின் நள்ளிரவில் தலைமையமைச்சர் பேசிய பேச்சு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை; அவர் சுருக்கமாகத் தொட்டும் தொடாமலும் -- சொற்பொழிவு எனக் கூற முடியாத அளவிலும் பேசினார்; எந்த வகையிலும் அந்தப் பேச்சு அவருடைய வழக்கமான நடையில் இல்லாமல் இருந்தது.

இதற்குக் காரணம், குடியரசுத் தலைவரின் இந்தி மொழிபெயர்ப்பை மாநிலங்களவைத் துணைத் தலைவர் கௌரி முரகரி படித்ததுதான் எனக் கூறப்படுகிறது; தெற்குப் பகுதியிலிருந்து வந்த கௌரி முரகரி, இந்தி மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது, இந்திச் சொற்களை உடைத்துப் படித்தாராம் -- சொற்றொடர்களை உடைத்துப் படித்தாராம்!

இந்தி மொழிபெயர்ப்பை இந்தி பேசாத அரசியல்வாதி படிக்கவேண்டும் -- என அதிகாரத்திலுள்ளோர் செய்த ஏற்பாடு, நிறைவேறாமல் தோல்வியில் முடிந்தது!

கௌரி முரகரி படித்து முடித்ததும், தலைமையமைச்சரின் எண்ணப் போக்கு, 'இதோடு இது முடியட்டும்' என்ற வகையில் இருந்தது!

தலைமையமைச்சரும் அன்று அவைக்கூட்டத்தில் இந்தியில் பேசினார்; துணைக் குடியரசுத் தலைவர் ஜி. எஸ். பதக், நீண்ட நேரம் இந்தியில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1947 ஆகஸ்ட் 15-ந் தேதியன்று அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருந்தன!

இப்போது மத்திய பீடத்துத் தலைமையின் அரசியல் கண்கள், அதிகார பலம் வாய்ந்த கேந்திரங்களான இந்தி மாநிலங்கள்மீது விழுந்துள்ளன; ஆகவே இந்தச் சுதந்தர நாள் நிகழ்ச்சிகளில் இந்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது ஆச்சரியத்திற்குரியது அல்ல!"

—'மெயில்' : 20—8—72

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible]) [illegible] சென்னை-10) [illegible] வெளியிடப்படுகிறது.